# வடமராட்சி கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மீனவர்கள் மீது கடற்படை துப்பாக்கிச் சூடு

வடமராட்சி கிழக்கு கடற்கரையோரத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் மீது கடற்படையினர் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இச்சம்பவத்தில் மீனவர்கள் காயமெதுவுமின்றி தப்பி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக இப்படியான சம்பவங்கள் நாகர் கோவில் முதல் செம்பியன்பற்று வரையுள்ள கடற்பகுதியில் அடிக்கடி நடைபெற்றுவருகிறது.

இதேவேளை சுண்டிக் குளம் முதல் பருத்தித்துறை வரையிலான கடற்பகுதியில் கடற் படையினர் விசைப்படகுகளில் ரோந்துபோய் வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (10)


பக்கங்கள் நானகு  விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 264 பிரசோற்பதத் ஆவணி 03 ( 19 - 08 - 1991 ) திங்கள


# வடக்கில் விரைவில் இறுதி யுத்தமாம்!

## இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்க

வடபகுதியில் அடுத்த மூன்று மாதங்களினுள் கணிசமான அளவில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார். லேக்ஹவுஸ் பத்திரிகைகளுக்கு அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டி ஒன்றிலேயே இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

"வடக்கில் இன்னும் சில வாரங்களில் கணிசமான அளவு தொடர்ச்சியான பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அங்கு அரச நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தவும், புலிகளின் தொகையைக் குறைக்கவுமே இந்த இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விரைவில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த இராணுவ நடவடிக்கைகளே இராணுவத்தின் இறுதி நடவடிக்கைகளாக இருக்குமெனவும் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

ஆனையிறவு முகாமினுள் படையினர் நுழைந்த பின்னரும் தொடர்ந்து தினமும் விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் படையினர் மீது தாக்குதல் நடாத்தி வரு

—04ஆம் பக்கம் பார்க்க

## புல்டோசரின் அருகில் சென்ற படையினர் மீது தாக்குதல்

வடமராட்சி கிழக்கு முள்ளியான் பகுதியில் புலிகளால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த புல்டோசர் ஒன்றை படையினர் அணுகிய போது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இதேவேளை ஆனையிறவு முகாமில் புலிகளின் தாக்குதலினால் சேதமடைந்த தளபாடங்களுக்குப்பதிலாக புதிய பொருள்கள் அங்கு சென்றுள்ளதாகவும், முகாமை பாதுகாக்கும் பொருட்டு முகாமைச் சுற்றி படையினர் கண்ணி வெடிகளை புதிதாக மீண்டும் புதைத்து வருவதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்தது.

## பளை விமானத்தாக்குதலில் பல கட்டிடங்கள் சேதம்

பளை, தம்பகாமம், குறிஞ்சாத்தீவு ஆகிய பகுதிகளில் கடந்த சில நாள்களாக விமானப்படையினரின் குண்டு வீச்சினால் பல வீடுகள், வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பளைப் பகுதியில் மட்டும் 20 இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை குறிஞ்சாத்தீவுப்பகுதியில் விமானபபடையினரின் குண்டு வீச்சினால் இயக்கச்சிப்பகுதியில் எஞ்சியுள்ள வர்த்தக நிலையங்களும் வீடுகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. (24)

## ஆனையிறவில் தொடர்ந்து விமானக் குண்டு வீச்சு

நேற்றும் ஆனையிறவு இராணுவ முகாம் சூழவுள்ள பகுதிகளை நோக்கி குண்டு வீச்சு விமானங்கள், அவ்ரோ விமானங்கள் கடும் தாக்குதல்களை மாலை வரை மேற்கொண்டதாக அங்கிருந்து

—04ஆம் பக்கம் பார்க்க

கர்நாடகத்தில் சம்பவம்

## பொலிஸாரின் தேடுதலின் போது 12 பேர் சயனைட் அருந்தினர்

கர்நாடக மாநிலம் மாங்கையா கிராமத்தில் நேற்று முன்தினமிரவு இந்திய பொலிஸார் சோதனை நடாத்திய போது இலங்கையைச் சேர்ந்த 12 பேர் சயனைட் அருந்தி தற்கொலை செய்துவிட்டதாகவும் வேறு ஐவர் சயனைட் அருந்தி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும் இந்திய வானொலி அறிவித்தது.

இதேவேளை திருச்சியில் இலங்கையர் ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைதுசெய்ய முயன்ற

—04ஆம் பக்கம் பார்க்க

## இருபதாயிரம் இலங்கையரை காணவில்லையாம்!

தமிழகத்தில் தற்போது இரண்டு லட்சம் இலங்கையர்கள் தங்கியுள்ள போதிலும் இவர்களில் முப்பதாயிரம் பேரே மாநில அரசில் பதிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

பதிவு செய்யாத இலங்கையரை தேடி தமிழக பொலிஸார் தேடுதல் வேட்டை நடாத்திய போதிலும் இதுவரை பத்தாயிரம் பேர் மட்டுமே சிக்கியுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ் மாவட்ட வெற்றிடங்கள் நிரப்ப போட்டிப்பரீட்சை

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள எழுதுவினைஞர், மற்றும் தட்டெழுத்தாளர் (தமிழ், ஆங்கிலம்) ஆகிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

இங்கு நிலவும் மேற்படி ஊழியர்களின் பற்றாக்குறையினால் அரச அலுவலகங்களில் பல வேலைகள் செய்ய முடியாதிருப்பதாகவும் ஒரு ஊழியர் பலருடைய வேலைகளைச் செய்வதாகவும் அரசாங்க அதிபர் அரசுக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து பொது நிர்

—04ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு அறிக்கை பெற்றே அரச வேலைவாய்ப்பு

எதிர்காலங்களில் அரச துறையில் வேலைவாய்ப்பை பெறுபவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நபரின் பாதுகாப்பு அறிக்கை தேசிய பாதுகாப்பு தகவல் திணைக்களத்திலிருந்து பெறப்பட வேண்டும். இது திருப்தியளிக்கும் பட்சத்திலேயே அவருக்கு அரச திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனத்தில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

## வெற்றிலைக்கேணி கடலில் மற்றுமோர் கப்பல்!

வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் கடற்படையினரின் மற்றுமோர் பாரிய கப்பல் ஒன்று தரித்து நிற்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

ஆனையிறவில் கடும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கையில் இக்கடற்பகுதியில் ஒரு கப்பல் மட்டுமே தரித்து நின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. 10

## நிலைமை சுமுகமானதும் கச்சதீவிற்கு இந்தியர் வரலாம்

இலங்கையில் நிலைமை சுமுகமானதும் கச்சதீவில் இந்திய மீனவர்கள் முன்னர் போல் அனுமதிக்கப்படுவர் என இலங்கை வெளியுறவு அமைச்சுகள் உறுதியளித்துள்ளன.

முன்னதாக கச்சதீவு இந்தியாவிற்கே சொந்தமானது என தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியது குறித்து வெளியுறவு அமைச்சகம் இந்திய மத்திய அரசிடம் தனது ஆட்சேபனையை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## உள்ளமெல்லாம் நல்லை

ராகம் - சிந்துபைரவி தாளம் - ஆதி

பல்லவி

மாதுமையின் புதல்வா மாயவனின் மருகா!
போதுமைய்யா போதும் சோதனைகள் குமரா!!
(மாது ......)

அநுபல்லவி

அடியவரின் அன்பை ஐயமுறல் தகுமோ?
அடியவரைத் துயரில் ஆழ்த்துவதும் அழகோ?
(மாது ......)

சரணம்

உள்ளதெல்லாம் உனக்கே அன்புடனே தந்தேன்!
உள்ளமெல்லாம் நல்லைப் பதியெனவே கொண்டேன்!!
உள்ளதெல்லாம் உன்தன் வடிவெனவே கண்டேன்!
உள்ளதெல்லாம் தந்தும் உள்ளமெல்லாம் நொந்தேன்!!
(மாது ......)

- ''முருகு''

# சிட்னி பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கல்விக்கு இடம்

சிட்னி பல்கலைக்கழகத்தில் முதன் முதலாகத் தமிழ் கல்விக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிட்னி பல்கலைக்கழகத்தின் இந்திய வரலாறு, சமய ஆய்வுகள், சமஸ்கிருதம், ஹிந்தி மற்றும் பல பிரிவுகளில் கற்பதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்திய ஆய்வுத் துறை நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எ●.என். மூகர்ஜி இவ் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து தமிழ்க் கல்வியை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய கலாநிதி ஆ.கந்தையா அவர்கள் தமிழ் விரிவுரைகளை நடாத்தவுள்ளார்.

## கனடா சென்ற 20 இளைஞர் திருப்பி அனுப்பப்பட்டனர்

தொழில் முகவர் மூலம் கனடாவுக்கு அனுப்பப்பட்ட சுமார் இருபது இளைஞர்கள் இடைவழியில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் போலிப் பா● போட்டுடன் சென்றதாலேயே இவ்வாறு திருப்பி அனுப்பப் பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் மீது மோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இவர்கள நீதிமன்றத்தில் ஆ ஜார் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். 06

## மாவட்ட நிர்வாக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்புக் கூட்டம் இம்மாதம் 22 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு கிளிநொச்சிச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல மாவட்டத் திணைக்கள அதிகாரிகள், சகல மாவட்ட கூட்டுத்தாபன அதிகாரிகள், சகல மாவட்ட விவசாயக் குழு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது இக் கூட்டத்திற்குச் சமுகந் தருமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் க பொன்னம்பலம் அவர்கள் கேட்டுள்ளார்.

இக் கூட்டத்தில் கிளி- மாவட்ட விவசாய அபிவிருத்திச்செயற்படு திட்டம் 1991/92 மாவட்ட விவசாய உப குழுக் கூட்டம் திணைக்கள கூட்டுத்தாபன நடைமுறைப் பிரச்சினைகள்என்பவை பற்றி ஆராயப்படவுள்ளன. (31)

## விவசாயப் பண்ணைக்கு இயந்திரம் அன்பளிப்பு

திருநெல்வேலியில் உள்ள அரசினர் மாவட்ட விவசாயப் பண்ணைக்கு தொழிலதிபர் க.கனகராசா பனை ஓலைகள் வாரும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்ய முசன்வந்துள்ளார் என விவசாயப் பண்ணை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் பல யுவதிகள் நன்மையடைவார்கள் தற்பொழுது விவசாயப் பண்ணையில் தொடர்ந்து நடைபெற்று வரும் குறுகிய கால பயிற்சிகளான விவசாயம், மனையியல், தையல் போன்ற பயிற்சிகளுடன் இனிமேல் பனைவள உற்பத்திப் பொருள்கள் செய்வது தொடர்பான பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட விருக்கின்றன. (06)

## சைக்கிள் ஓட்டப்போட்டி

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினரால் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை நடாத்தப்படும் என நிலையத் தலைவர் க.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து மறுநாள் முதலாம் திகதி காலை மரதன் ஓட்டப்போட்டியும், மாலை சிறுவர் விளையாட்டுப்போட்டியும் நடைபெறவுள்ளன

இம் மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அனைவரும் இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் நிலையச் செயலாளர் கோணே●வரனிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோப்பாயில் செஞ்சிலுவைச் சங்க கிளை திறக்கப்பட்டது

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளை அண்மையில் கோப்பாயில் திறந்து வைக்கப்பட்டது

செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி சி. எஸ். நச்சினார்க்கினியர் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்துள்ளார். சிறப்புவிருந்தினர்களாக யாழ் கிளைச் செயலாளர் ச. சிவானந்தராசா,கோப்பாய் உதவி அரச அதிபர் எஸ். முருகேசபிள்ளை அவர்களும் கலந்து கொண்டனர்.

இவ் வைபவம் கோப்பாய் பிரிவுக் கிளைத் தலைவர் க மனோகரநேரு தலைமையில் நடைபெற்றது (06)

## கொழும்பில் உள்ள தமிழரிடம் அதிக வாடகை பெறுகின்றனர்

கொழும்பில் உள்ள வீடுகளில் தங்கியிருக்கும் தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து விட்டு தங்கி இருக்கலாம் என்ற அறிவித்தலையடுத்து வீட்டுச் சொந்தக்காரரர் அதிக கட்டணம் அறவிடுவதாகத் தெரியவருகிறது.

இந்த அதிக கட்டணத்தையும் பொருட்படுத்தாது கொழும்பில் பலர் வாடகைக்குவீடுகள் எடுத்துஇருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் பயிற்சி நெறி

பலாலி ஆசிரியகலாசாலையில் மீண்டும் ஆங்கில ஆசிரியர் பயிற்சி, உடற்கல்வி ஆசிரிய பயிற்சி, கைப்பணித் துறை பயிற்சி ஆகிய நெறிகள் ஆரம்பிக்கட படவுள்ளன.

பலாலி ஆசிரியர்கலாசாலையில் முன்னர் பயிற்றுவிக்கப் பட்ட இந் நெறிகள் 1984இல் கலாசாலை இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டதையடுத்து நிறுத்தப்பட்டிருந்தன.

இப்பயிற்சிநெறிகள் 1992ஆம் ஆண்டு முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (02)

## மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

முல்லைத்தீவுமாவட்டத்தில் ஏற்பட்டுவரும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க கப்பல் மூலம் மருந்து வகைகளை தருவிக்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் தொடர்பு கொண்டுள்ளார்.

வவுனியா களஞ்சியிலிருந்து இம் மாவட்டத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிலையத்தினரால் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மருந்துகள் வந்து சேர்வது வழக்கம்

ஊரங்குச் சட்டம் இம் மாவட்டத்தில் அடிக்கடி அமுல் படுத்தப்படுவதால் மருந்து வகைகள் வருவது தடைப்பட்டு வருகிறது.

இதனால் அலம்பில் முள்ளியவள்ளை வைத்தியசாலைகளில் மருந்தின்றி நோயாளிகள் ஏமாற்றத்துடன் செல்கின்றனர். (08)

## கிராம அபிவிருத்திச் சங்க சமாசம் அமைத்தல்

வலி-கிழக்கு உதவி அரசாங்க அதியர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் அமைப்பதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை பத்துமணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்துக்குத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர்களை சமுகமளிக்கும்படி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (06)

## காவலில்

ஜே. வி. பி. இயக்கத்தின் தொடர்பு உடையவர் என்ற சந்தேகத்தில் 1988 இல் கைது செய்யப்பட்ட சிலர் விடுவிக்கப்படாமல் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைகுறித்து சில எதிர்க்கட்சி எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்க முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர். (06)

## திறந்த பல்கலைக்கழகத்தின் விண்ணப்பப் படிவங்கள்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் புதிய 91/92ஆம் கல்வி ஆண்டுக்குரிய தொழில் உரித்துவத்திலும் சிறு வணிக முகாமைத்துவத்துக்குமான சான்றிதழ் கற்கை நெறிக்குமான விண்ணப்பப்படிவங்கள் யாழ் பிரதேச நிலையத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு தொகை தொழில் உரித்துவம் கிடைத்துள்ளமையால் கற்க விரும்புபவர்கள் யாழ்பிரதேச நிலையத்துடன் திங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் சனி, ஞாயிறு உட்பட அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 05-09-1991ஆகும். இக்கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள் டிப்ளோமா — முகாமைத்துவக் கற்கை நெறிக்கு பதிவு செய்ய உதவி ஆக அமையும். (44)


## சிறு விளம்பரம்

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினை எதுவாயினும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும். கைரேகை, விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு:- டாக்டர் த சிவானந்தன், பிரபல சோதிடர். ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி. நல்லூர் வடக்கு. 08108


## குளிப்பதற்குச் சவர்க்காரத்திற்குப் பதிலாகப் பாசிப்பயறு

சவர்க்காரத் தட்டுப்பாடு பல பதிலீடுகளைத்தோற்றுவித்துள்ளது.

இதுவும் சவர்க்காரத்திற்கான சிறந்த பதிலீடுதான்!

பாசிப்பயறைப் பச்சையாக அரைத்து முகத்தையும், உடலையும் தேய்த்துச் சுத்தப்படுத்தலாம். அல்லது பாசிப்பயறை இடித்து மாவாக்கி அதனைத் தேய்த்தும் முகம் கழுவினால் முகம் பிரகாசமாகும்.

இது எமது முன்னோர் பயன்படுத்திய அரிய முறையாகும். (05)

# இழை அவிழ்ப்பதற்கு முன் களத்தில் குதிக்கும் போராளிகள்

- பிரசாத்

எம்மால் கடந்த ஜூலை 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஆனையிறவு இனவெறி பிடித்த சிங்கள இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது, நாம் தொடர்ச்சியாகப் போரிட்டுக்கொண்டிருக்கும்போது,

எம் தாக்குதலினால் காயப்பட்டு, குற்றுயிரில் தவித்துக்கொண்டிருந்த இராணுவத்தை மீட்கவும் அங்கிருந்த எண்ணூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தைமீட்கவும், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிபகுதியில் இனவெறி பிடித்த எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவம் குவிக்கப்பட்டது. நாம் ஆனையிறவு தளம் மீது தாக்குதல் நடந்துகொண்டிருந்த சமயத்தில் இறக்கப்பட்ட இராணுவத்திற்கு எதிராக ஒரு மிகப் பெரிய யுத்தத்தைத் தொடுத்தோம். நாம் இரு முனைகளில் இரு யுத்தங்களைச் சந்திக்கப் போரிட்டோம். இவ்வாறு தென்மராட்சி கல்வயல் பகுதியில் நடாத்தப்பட்ட போர்க்காலக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் திரு.பிரசாத் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் இவ் யுத்தத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நிலையைப் பார்பபோமென்றால் அங்கே எமது மண்ணை பறிப்பதற்காக தேவைக்கேற்ப ஸ்ரீலங்கா இனவெறிப் படைகள் மாற்றியமைக்கப் படுகின்றன. எமது தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட படைப்பிரிவுகள் மாற்றப்பட்டு புதிய படைப்பிரிவுகள் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன.

ஆனால் எமது போராளிகளின் நிலையைப் பார்ப்போமென்றால், அவ் வீரம் செரிந்த யுத்தத்தில் குறிக்கப்பட்ட தொகைப் போராளிகள் யுத்தகளத்தில் குதிக்கும் போது அக்குறிப்பிட்ட போராளிகளின் எண்ணிக்கையில் இருந்துதான் எண்ணாயிரத்துக்குமேற்பட்ட இனவெறி பிடித்த இராணுவத்துக்கு எதிராக 24 நாட்களாக போரிட்டனர். இத் தொகையில் தினம் தினம் வீரமரணம் அடைகின்ற, காயமடைகின்ற, பாதிப்புக்குள்ளாகின்ற போராளிகள் எண்ணிக்கை குறிப்பிட்ட போராளிகளில் இருந்து குறைகின்றது. இங்கே காயப்படுகின்ற போராளிகள் கட்டிய இழை அவிழ்ப்பதற்கு முன்னரே களத்தில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இன்று நடப்பதோ தன்மான யுத்தம். தமிழர்கள் இந்நாட்டிலே வாழ்வதா இல்லை இந்நாட்டிலே சாவதா என்பதனை தீர்மானிக்கின்ற யுத்தம். இந்நேரத்தில் இளைஞர்கள், யுவதிகள் போராட்டக் களத்தில் குதித்து தமிழர்கள் தன்மானமாக வாழ, இம் மண்ணைக் காக்க முன் வாருங்கள் என்று கூறினார்.

## மருத்துவ சேவை ஊழியர் தகுதிகாண் பரீட்சை

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் மருத்துவசேவை ஊழியர்கள் மற்றும் நடுத்தரத் தொழில் நுட்ப தரத்திலான ஊழியர்களுக்கான தகுதிகாண் பரீட்சையை நடாத்த சுகாதார அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இந்தப் பரீட்சை ஏனைய பகுதியில் உள்ளவர்களுக்கு கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (06)

## தேவநாயகம் கொலை வழக்கு அடுத்தமாதம் விசாரணைக்கு

கொழும்பில் கடந்த மே மாதம் படுகொலை செய்யப்பட்ட மேஜர் ஜெனரல் தேவநாயகம் தொடர்பான வழக்கு அடுத்தமாதம் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த வழக்குச் சந்தேக நபரான மேஜர் ஜெனரலின் மகன் தினேஷ் தேவநாயகம் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜோர்ஜ் தேவநாயகம் மனைவி சரோஜினி தேவநாயகம், பணியாள் நந்தி ஆகிய மூவரையும் கத்தியால் குத்தியும், துப்பாக்கியால் சுட்டதாகவும் தினேஷ் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (06)

## கண்டறியாத ஊரடங்கு

வானொலிச் செய்தி கேட்டு அந்த வெளிநாட்டு அதிகாரி பெரும் விசனம் அடைந்தார். யாழ் நகரில் கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டமாம்.

அகதிமுகாம்களையும், வேறு சில இடங்களையும் அன்று அவர் பார்வையிடுவதாக இருந்தார். அன்றைய சகல நிகழ்ச்சிகளும் ரத்தாகி விட்டதேயென்ற மனச்சோர்வுடன் ஹோட்டல் அறையிலேயே பொழுதைக் கழித்தார்.

பத்து மணியளவில் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வைத்து விட்டு மேல் மாடியிலிருந்து நகரை நோட்டம் விட்டார். அங்கு சாதாரணமாக மக்கள் நடமாட்டம் இருப்பதைப் பார்த்தவர் ஆச்சரியத்துடன் ''ஊரடங்கு எடுத்தாச்சா?'' என்று மனேச்சரை ஆங்கிலத்தில் கேட்டார்.

''யாருக்காக ஊரடங்கு தெரியுமா? சிங்களவர்களை பேய்க் காட்டத்தான் ஊரடங்கு. புலிகள் ஆட்சி செய்யிற மண்ணிலை அவங்கடை ஊரடங்கு செல்லாது'' என்று சொன்னார் மனேச்சர்.

''கண்டறியாத ஊரடங்கு - சிங்களவனைப் பேய்க் காட்டி, என்னையும் ஏமாத்தி......'' வெளியே புறப்பட்டார் அந்த அதிகாரி.

— ஸ்ரீகுமரன்

## ஆடிப்பூர விழா

நயினாதீவு நாகபூஷணி அம்மன்ஆலயத்தில்ஆடி பூரவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அம்மனுக்கு (1008) ஆயிரத்துஎட்டு சங்குகளால் சங்காபிஷேகமும் நடைபெற்று சுவாமி வீதியுலாவந்த காட்சியும் இடம் பெற்றன. இவ் விழாவில் அமைதி வேண்டி விசேட பூசை வழிபாடுகளும் இடம் பெற்றன. (19)

## வருடாந்த மகோற்சவம்

வேலணை பெருங்குளம்முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் சென்ற 15-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்றுவருகின்றன. எதிர்வரும் 24-ம் திகதி சனிக்கிழமை காலை 7. 30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுதினம்தீர்த்தமும் 26-ம் திகதி திங்கட் கிழமை மாலை பூங்காவனத்துடன் திருவிழாக்கள்முடிவடைய விருக்கின்றன.

## அவசர கூட்டம்

பாடசாலைகளில் உடனடித் தேவைகள் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கானநடவடிக்கள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக பண்டத்தரிப்பு, யாழ்ப்பாண கல்விக் கோட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்க செயலாளர்களையும், பொருளாளர்களையும், இக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத அதிபர்களையும்கோட்டரீதியாக 20. 8. 1991 செவ்வாய்க்கிழமை பி ப. 2. 00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும், 21 08. 1991 புதன் கிழமை பி. ப. 2. 00 மணிக்கு யாழ்ப்பாண சாதனா பாடசாலை மண்டபத்திற்கும் சகலரையும் தவறாது வருகை தரும் வண்ணம் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் வேண்டியுள்ளனர்.

## விபுலாநந்த அடிகள் நூற்றாண்டு:

## விபுலாநந்த அடிகள் வாழ்வில் சிறப்பு நிகழ்ச்சிகள் சில

★ தமது பதினாறாவது வயதிலே விபுலாநந்தர் ''கேம்பிரிட்ச்'' பல்கலைக் கழகத்தினரால் நடத்தப்பட்ட தேர்விலே முதன்மையாகத் தேறினார். ஆதலினால் படித்த கல்லூரியிலே ஆசிரியராக நியமனம் பெற்றார்.

★ 1916 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பண்டிதர் தேர்விலும் தேறினார். இலங்கையிலே முதன் முதலாகப் பண்டிதர் தேர்வில் தேறிய பெருமை விபுலாநந்தரையே சாரும்.

★ பிறர் உதவியின்றித் தாமாகவே படித்து லண்டன் பல்கலைக் கழகம் நடத்தும் பி. எஸ். ஸி. (B. S. C.) தேர்விலே தேறிப் பட்டதாரியானார்.

★ ஸ்ரீராமகிருஷ்ண மடாலய வாயிலாக வெளிவரும் திங்கள் இதழ்களான ''ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்'' என்னும் தமிழ்ச் சஞ்சிகைக்கும், 'வேதாந்த கேசரி' என்னும் ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

★ அடிகளார் துறவியான பின் அதிக நூல்களையெல்லாம் கற்க முடிந்தது. பல நூல்களை மொழி பெயர்க்கவும் முடிந்தது. அந்த வகையிலே விவேகானந்த ஞான தீபம், கர்மயோகம். ஞானயோகம். நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகாநந்தர் சம்பாஷணைகள் எனும் நூல்களை அடிகளார் மொழி பெயர்த்தார்.

★ சிதம்பரத்திலே பல்கலைக் கழகம் நிறுவப்பட்டபோது தமிழ்ப் பேராசிரியர் பதவியினை ஏற்கும் பொருட்டு அடிகளாரை அண்ணாமலைச் செட்டியார் வேண்டினார். அடிகளாரும் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் தமிழ்ப் பேராசிரியர் பதவியினை ஏற்றார்.

★ இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்றதுடன் கல்விப் பகுதிப் பாட நூற்சபைத் தேர்வுச் சபை, கல்வி ஆராய்ச்சிச் சபை ஆகியவற்றின் முதன்மையான உறுப்பினராகவும் விளங்கினார்.

★ பத்தாண்டுகளாக ஆராய்ந்து கண்டுணர்ந்த இசைநூலான யாழ் நூலினைக் கரந்தை தமிழ்ச் சங்கத்து ஆதரவில் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில் அரங்கேற்றினார்.

## இந்திய பாராளுமன்றத்தில் அரசியல் நாகரிகம்?

இந்தியாவில் பாராளுமன்றம், சட்டசபைகள் போன்றவற்றில் உறுப்பினர்கள் ஆவேசமாகக்கத்திப்பேசுவதும் ஒருவரை ஒருவர் தாக்க முற்படுவதும், தாக்குவதும் சபாநாயகர் அவர்களை அடக்க முயற்சிப்பதும், அடிக்கடி கேள்விப்படும் சாதாரண செய்திகள் ஆகிவிட்டன.

அண்மையில் பாராளுமன்றத்தில், உறுப்பினர்கள், இப்படி ஆளுக்கு ஆள் சத்தம் போடுவதை தாங்கமுடியாத அவை முதல்வர் அர்ஜுன் சிங் ''தயவு செய்து குறைவாகச் சத்தம் போடுங்கள், உங்களை அடக்க மணியை அடித்து சென்றவாரம் ஒரு மணி உடைந்து விட்டது, இப்படியே மணிகள் உடைந்து கொண்டு போனால், புதிதாக மணிகள் அடிக்கடி வாங்க கட்டுப்படியாகாது.''

''எனவே மணிக்குப் பதிலாக விசிலை'' சிபாரிசு செய்ய வேண்டி நேரிடும், அப்படிச் செய்வது பாராளுமன்ற மரபிற்கு இழுக்கைத் தேடித் தரும் என்பதை உறுபினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்'' என்று கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. 16

## சர்வதேச லைசென்ஸ் வழங்கும் போலி நிறுவனம் கண்டுபிடிப்பு

போலி சர்வதேச சாரதிப் பத்திரம் வழங்கும் நிலையம் ஒன்றைக் கொழும்பு விசேட பொலிஸ் நடவடிக்கைப் பணியகம் கண்டுபிடித்துள்ளது.

மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் பத்திரம் போன்று தயார் செய்யப்பட்ட போலிச் சாரதிப் பத்திரம் இந்த நிலையத்தினால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு சாரதிப் பத்திரத்திற்கு ரூபா 12 ஆயிரம் இங்கு அறவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடபகுதியைச் சேர்ந்த மூன்று தமிழ் வாலிபர்கள்கொழும்பில்கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.(12

## மரநடுகை ஊக்குவிப்பு

விறகுக்காகப் பெருமளவு மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. இதனை ஈடுசெய்ய இம்முறை அதிகளவு மரநடுகை செய்தல் அவசியமாகும்.

எனவே மரநடுகையை ஊக்குவிக்க அதிகளவில் மரநாட்டு விழாக்களை நடாத்த நிறுவனரீதியான சமூக அமைப்புக்கள் முன்வர வேண்டும். அதற்கு மில்க்வைற் நிறுவனமும் உதவிகளை வழங்கி ஊக்குவிக்கும் என மில்க்வைற் தொழிலதிபர் க. கனகராசா தெரிவித்தார். (05)

# ஆயுதங்கள் பல இருக்கின்றன

## அதை தூக்கும் போராளிகளே தேவை

தமிழின விடிவிற்காகத் தம் உயிரையே கொடுக்கத் தயாராகவும், அவர்களுக்காகவே தமது வாழ்க்கையைத் தியாகம் செய்யவும் துணிந்துள்ள தமிழீழத் தேசியப் படை தமிழீழத்தின் எல்லைகளை மீட்கும் வரை போராடும். தமிழீழ மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்கும் வரை போர் தொடர்ந்து கொண்டே போகும். இப் போரை நாம் தொடர்ந்து மேற்கொள்வதற்கு எமது தமிழீழத் தேசியப் படைக்கு அனைத்து மக்களும் தமது கரங்களைக் கொடுத்து பலப்படுத்த வேண்டும். புங்குடுதீவில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு தலைமைச் செயலக உறுப்பினர் திரு. கலையரசன் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்:-

அண்மையில் நடைபெற்ற ஆனையிறவுப் போரில் எமது போராளிகளின் வீரமும், தியாகமும் சர்வதேசமே வியக்கும்படி இருந்தது. முப்படைகளுடன் பல்லாயிரம் இராணுவம் வெட்டை வெளியிலே முன்னேற முயன்றும் எமது வீரர்களின் தளராத போரினால் இராணுவம் பல இழப்புக்களைச் சந்தித்தது: ஆனால் புலிகள் வெளியில் நின்று போராடியதால் பலர் காயமடைந்தனர், பலர் வீரமரணமடைந்தனர். அதனால் அவர்கள் பின் வாங்கப்பட்டனர். இவர்களுடைய இடத்தை நிரப்புவதற்கு எம்மிடம் போராளிகள் பற்றாக்குறை இருக்கின்றது எம்மிடம் பல ஆயுதங்கள் இருக்கின்றன ஆனால் அதைத் தூக்குவதற்கு நெஞ்சுரம் கொண்ட போராளிகள் மேலும் தேவையாக உள்ளது. அப்போராளிகள் தமிழீழ மக்களிலிருந்தே உருவாக வேண்டும் என்றார்.

வோர்த்துளி...

**போராடு!**

அடிவருடும் பழக்கத்தை
அகற்று—வேரோடு
விடிவுக்கு எழுந்துவா,
துணிந்து போராடு!
அடிமையாய் அஞ்சியஞ்
சிச்
சாகின்ற வாழ்வுக்கு
முடிவு காண், மூட்டு
ஈழ நெருப்பு!

—வாஞ்சி

## பற்றறி கடத்திய பெண் வவுனியாவில் சிக்கினார்

ஆடைகளின் மடிப்பில் 24 பென்டோஜ் பற்றறிகளைக் கடத்தி வந்த பெண் வவுனியாவில் சோதனையின்போது பொலிஸாரிடம் பிடிபட்டுள்ளார்.

வவுனியா புகையிரத நிலையத்தில் சோதனை செய்யும் பொலிஸாரிடமே இப் பெண் அகப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (06)

## அ. தி. மு.க. அமைச்சர்களை எதிர்க்காது - ஜெயலலிதா

இந்திரா காங்கிரஸ் அமைச்சர்களான சிதம்பரம் ,அருணாசலம் ஆகியோருக்கு எதிராக இனி அ. தி. மு. க. எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடமாட்டாது என முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சிதம்பரம் மீது எதிர்க்கட்சியினரே தாக்குதல் நடத்திவிட்டு எம்மீது பழிபோடுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். ஜெயலலிதாவை வரவேற்ற அமைச்சர் ப. சிதம்பரம், நேற்று மதுரை விமான நிலையத்தில் டில்லி புறப்படுவதற்கு முன் செய்தியாளர்களிடம் பேசினார்

"என் மீது தாக்குதல் நடாத்தியவர்கள் யார் என்பதை தமிழக மக்களும் பத்திரிகைகளும் நன்கு அறியும்" என அவர் குறிப்பிட்டார்.

## நிவாரணத்திற்கு மறுப்பு!

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுவதாக இடம்பெயர்ந்த மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். (24,10)

## விதை நெல் சிபார்சு

தமிழீழ ஆய்வு நிறுவனம் காலபோக நெற்செய்கையைக் கருத்திற்கொண்டு விவசாயிகளுக்கு நன்மை புரியும் வகையில் 7 விதமான விதை நெல் இனங்களைத் தற்போது சிபார்சு செய்துள்ளது. (18)

## கொழும்பு செல்கின்றன

யாழ் போதனா வைத்திய சாலைக்குத் தேவையான மருந்துப்பொருள்கள் தவிர்ந்த ஏனைய அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவருவதற்காக போதனாவைத்தியசாலைக்குச் சொந்தமான லொறியொன்றும் யாழ் பிராந்திய சுகாதார நிலையத்திற்குச் சொந்தமான லொறி ஒன்றும் இன்று இங்கிருந்து கொழும்பு புறப்பட்டுச் செல்கின்றன. (04)

## சினிமாத்துறை நிதியுதவி !

சிங்கள சினிமாத்துறை பாதுகாப்பு நிதிக்கென ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. நிதி திரட்டுவதற்கு என விசேட திரைப்படக் காட்சிகள் தற்போது அசோகா திரைப்பட மாளிகையில் காண்பிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

**வைத்தியம்**

தலை முடி உதிர்கின்றதா? தலை மயிர் நரைக்கின்றதா? நரம்புத் தளர்ச்சியா? வாதரோகமா? தொய்வு வியாதியா? தேக வீக்கமா?, கிரந்திப் பீடையா? மாதவிடாய்க் கோளாறுகளா? கவலை வேண்டாம். நாடுங்கள் ! நலமடையுங்கள்!!

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M., R. A. M. P. [Sri Lanka[

**"சிவா வைத்தியசாலை"**

**384, கோவில் வீதி, — நல்லூர் வடக்கு.**

08107

வடக்கில்...

வதைத் திசை திருப்பும் முகமாக ஹமில்டன் வனசிங்க இத் தகவலைப் பகிரங்கமாக வெளியிட்டிருக்கலாம் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனையிறவு...

வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல்களை தொடர்ந்த வண்ணம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. படையினர் ஷெல் தாக்குதல்களையும் இடையிடையே மேற்கொண்டுவருகின்றனர். (01)

## நாலாயிரம் ஹக்டரில் சிறுபோகம் வேளாண்மை

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாலாயிரம் ஹக்டர் விஸ்தீரணத்தில் இவ் வருடம் சிறுயோக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்புப் பகுதியைத் தவிர இவ்வருடம் பெரும் போகம் 15 ஆயிரம் ஹக்டரில் செய்ய அரச அதிபர் திட்டமிட்டுள்ளார்.

இம் மாவட்டத்தில் ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்கவே கூடுதல் ஹக்டரில் பெரும் போகச் செய்கை மேற்கொள்ள விரும்பதாகவும் இதனால் கொழும்பிலிருந்து அரிசியை எதிர்பார்க்கத்தேவை ஏற்படாது எனவும் அரச அதிபர் ஆர். தருமகுலசிங்கம் முரசொலிக்குத் தெரிவித்தார் (08)

## 108 புதிய கிராமசேவையாளர் நியமனமாவர்

குடாநாட்டில் புதிய கிராம சேவையாளர்களை போட்டிப் பரீட்சை மூலம் நியமிக்குமாறு யாழ் அரச அதிபருக்கு வடகிழக்கு மாகாண சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது இது தொடர்பான சுற்றறிக்கை நேற்று திருகோணமலையிலிருந்து அரச அதிபருக்கு கிடைத்துள்ளது,

இதன்படி முதல் கட்டமாக 108 கிராம சேவையாளர்கள் போட்டிப் பரீட்சை மூலம்நியமிக்கப்படவுள்ளனர்.

## இலங்கை வங்கி, மக்கள் வங்கி புதிய கிளைகள் இல்லை!

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் கிளைகள் நாட்டின் எப் பகுதியிலும் இனிமேல் திறக்கப்படமாட்டாது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

முன்னதாக இவ் வங்கிகள் ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது என அரசு உறுதியளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது .

## நடமாட்டத்தை ஆராயவேண்டும் !

இந்தியாவில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை முழுமையாக இந்திய அரசு ஆராயவேண்டும் என பி ஜே. பி. கட்சியின் தலைவர் முரளி மனோகர் ஜோசி நேற்று பங்களூரில் செய்தியாளரிடையே பேசுகையில் தெரிவித்தார்.

## சிங்கள டாக்டர்!

காரைநகர் ஆஸ்பத்திரியில் சிங்கள டாக்டர் ஒருவர் கடமையாற்றி வருகிறார் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் காரைநகர் பகுதியில் உள்ளமைக்கான தமது நோய்களை விளங்க வைக்காத நிலையில் பெருங்கஷ்டப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (06)

யாழ் மாவட்ட...

வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சு இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வெற்றிடங்கள்போட்டிப் பரீட்சை மூலமாக நிரப்பப்படுமெனவும் அது பற்றிய விவரங்கள் நேற்று வடகிழக்கு மாகாணசபையினால் யாழ் அரச அதிபருக்கு கிடைத்துள்ளது.

1983 ஆம் ஆண்டுக்குப் பின் யாழ் மாவட்டத்தில் பல அரச அலுவலகங்களில் மேற்படி தரத்திலான ஊழியர்கள் பலர் இடம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாலும் பலர் சுயவிருப்பின் பேரின் ஒய்வு பெற்றுள்ளதாலும் இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. 06

## வீரமரணம்

21-07-91இல் கட்டைக்காட்டில் நடைபெற்ற மோதலில் அன்ரனி (வல்லிபுரம் பிரதாபன் கல்வியங்காடு) ரவி (கனகசபை ரவீந்திரன், புத்தூர்) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

## வளர்ந்தோர் கல்விவகுப்புகள்

முறைசாராக் கல்விப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்படும் வளர்ந்தோர் கல்வித் திட்டவகுப்புகள் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டதின் கீழ் எமது பிரதேசத்துக்குப் பொருத்தமான.கல்வி சமூக மேம்பாட்டுத் திட்டமிடல் ஆகிய விடயங்களில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சி நிலையங்கள்-இராமநாதன் கல்லூரியில் 19 20,21 ஆம் திகதிகளிலும் கனகரெத்தினம்ம. ம. வித்தியாலயத்தில் 26,27 ,28,ஆம் திகதிகளிலும் காலை 8 மணிமுதல் 2 மணி வரை இவ்வகுப்புக்கள் நடைபெறும்.

பொலிஸாரின்...

போது அவர் சயனைட் அருந்த முயன்றதாகவும் எனினும் அது தடுக்கப்பட்டு அவர் கைதானதாகவும் சென்னைச் செய்திகள் தெரிவித்தன. பூர்வாங்க விசாரணைகளில் அவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் என அறியப்படுகிறதாம்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 19.08.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.